www.tamilarangam.net

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

## அரசியல் தொடர்

அற்புதன்

5

## தவறிய குறி இரண்டு!

### பத்மநாதனுக்கு முன்னர்

இன்ஸ்பெக்டர் பத்மநாதன் தன்மீது உடனடியாக குறிவைக்கப்படும் என்று எதிர்பார்த்திருக்கவில்லை.

அவரது வீட்டின் முன்பாக காரை நிறுத்திவிட்டு கேற் திறப்பதற்காக தாமதித்த விநாடிகளில் முதல் சூடு விழுந்தது.

கைத்துப்பாக்கியை எடுத்துக் கொள்ளக்கூட அவகாசம் இல்லை.

கார்க் கதவைத் திறந்து இறங்கி ஓடிய பத்மநாதன் மீது மேலும் பல துப்பாக்கிச் சூடுகள் விழுந்தன.

அவர் பலியானார்.

பொலிஸ் வட்டாரம் அதிர்ச்சியடைந்தது. தமிழ் பத்திரிகை ஒன்று, சூடுபட்ட நிலையிலும் இன்ஸ்பெக்டர் பத்மநாதன் கொலைஞர்களை சிறிது தூரம் துரத்திச் சென்றார் என்று செய்தி போட்டது.

'இன்ஸ்பெக்டர் பத்மநாதன், பஸ்தியாம்பிள்ளை போன்றவர்கள் அப்போது 'ஹீரோக்கள்' போலவே மதிக்கப்பட்டார்கள்.

இளைஞர்கள் ஆயுதம் ஏந்துவது மக்களால் வியப்பாக நோக்கப்பட்டது. அதே நேரம் பொலிசார் அவர்களை சுலபமாக பிடித்துவிடக்கூடும் என்றும் நம்பப்பட்டது.

1978ல் நடந்து முடிந்த பத்மநாதன் கொலை முக்கியமானதாக இருந்த போதும் (சென்ற வாரம் ஆண்டு தவறுதலாக 1976 என்று இடம் பெற்றுவிட்டது) அதற்கு முன்னரும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மூவர் கொல்லப்பட்டிருந்தனர்.

அல்பிரட் துரையப்பா கொலை வழக்கின் துப்புத் துலக்கலில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் கருணாநிதி. இவர் காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்தவர்.

1977ம் ஆண்டு பெப்ரவரி 14ம் திகதி கொன்ஸ்டபிள் கருணாநிதி மாவிட்டபுரத்தில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

துரையப்பா கொலை வழக்கில் துப்புத் துலக்கிய மேலும் இரு கொன்ஸ்டபிள்கள் ஒரே பெயரைக் கொண்டவர்கள்.

ஒருவர் காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்தவர். மற்றவர் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்தவர்.

நோக்கம் ஒன்றுதான். துரையப்பா கொலைக்கு காரணமானவர்களைக் கண்டறிவது.

பெயரும் ஒன்றுதான், சண்முகநாதன்! இரண்டு சண்முகநாதன்களும் தமக்கு கிடைத்த ஒரு தகவலை ஆராய ஒன்றாகச் சேர்ந்து இணுவில் என்ற இடத்திற்குப் போனார்கள்.

சிவில் உடையில் இருந்த இரு சண்முகநாதன்களையும் இனம் கண்டு கொண்ட இளைஞர்கள் இருவர் சைக்கிளில் அவர்களைப் பின்தொடர்ந்தார்கள்.

இணுவில் பஸ் நிலையம் நோக்கி நடந்துசென்ற இரு கொன்ஸ்டபிள்களும் திடீரென துப்பாக்கி வேட்டுக்களை எதிர்கொண்டனர்.

தமக்கு கிடைத்த தகவலை ஆராயவோ, அல்லது பஸ்சை பிடிக்கவோ சந்தர்ப்பமே இல்லாமல் இரு சண்முகநாதன்களும் பலியானார்கள்.

இது நடந்தது 18.05.77- நேரம் காலை 9.15 மணி.

கொன்ஸ்டபிள் கருணாநிதி மற்றும் கொன்ஸ்டபிள்கள் சண்முகநாதன் மற்றும் சண்முகநாதன் கொலைகளுக்கு காரணமானவர்கள் விடுதலைப் புலிகள்.

ஆனால், இன்ஸ்பெக்டர் பத்மநாதன் கொலைக்கு காரணம் விடுதலைப் புலிகள் அல்ல.

### குட்டிமணி குழுவினர்

குட்டிமணி, தங்கத்துரை, சிறிசபாரத்னம், பெரியசோதி, சின்னச்சோதி போன்ற இளைஞர்கள் தாம் ஒரு தனிக் குழுவாக இயங்கிக்கொண்டிருந்தார்கள்.

ஆரம்பத்தில் இக் குழுவினரோடு பிரபாகரனும் தொடர்புகளைக் கொண்டிருந்தார்.



குட்டிமணி

பின்னர் 1974ம் ஆண்டளவில் அக்குழுவினரோடு தொடர்புகளை முறித்துக்கொண்டு **தமிழ் புதிய புலிகள்** இயக்கத்தில் இணைந்து கொண்டார்.

குட்டிமணி குவினரே இன்ஸ்பெக்டர் பத்மநாதன் கொலைக்கு காரணமாக இருந்தனர்.

இன்ஸ்பெக்டர் பத்மநாதன் கொலைக்கு முன்பாக குட்டிமணி குழுவினரால் குறிவைக்கப்பட்டவர், அப்போது நல்லூர் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக இருந்த அருளம்பலம்.

தமிழ் காங்கிரஸ் கட்சி மூலமாக பாராளுமன்றம் சென்ற அருளம்பலம் பின்னர் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு தாவினார்.

ஒரேயொரு தடவை தனது கணவர் பாராளுமன்றம் செல்ல உதவுமாறு திருமதி அருளம்பலம் வாக்காளர்களிடம் வீடு வீடாகச் சென்று உருக்கமாக வேண்டிக்கொண்டார்.

"எங்கள் பலம் பொன்னம்பலம், எங்கள் பலம் அருளம்பலம்." 'போடு புள்ளடி சைக்கிளுக்கு நேரே' என்ற கோஷங்கள் அப்போது தேர்தல் காலத்தில் செவிகளுக்குள் வந்து விழும்.

உருகிப்போன நல்லூர் தொகுதி மக்கள் அருளம்பலத்துக்கு வாக்குகளை அள்ளிப் போட்டனர்.

## தவறாத குறி மூன்று!!

பாராளுமன்றம் சென்றவருக்கு ஆளும் கட்சிக்குச் செல்லும் ஆவலும் வந்துவிட கட்சி மாறிவிட்டார்.

### இரும்பு மனிதன்

அருளம்பலத்திற்கு முன்னர் நல்லூர் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர் அமரர் டாக்டர் இ.எம்.வி. நாகநாதன்.

நாகநாதன் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர். 'இரும்பு மனிதன்' என்று அழைக்கப்பட்டவர்.

நாகநாதன் பாதி அகிம்சைவாதி- மீதி தீவிரவாதி.

சத்தியாக்கிரகப் போராட்டங்களை தமிழரசுக் கட்சி நடத்தும்போது அடிபட்டாலும் மிதிபட்டாலும் தமிழரசுக்கட்சித் தலைவர்கள் சகித்துக்கொண்டிருப்பார்கள்.

நாகநாதன் பதிலடி கொடுக்க எழுந்து விடுவார்.

யாழ் கச்சேரிக்கு முன் நடந்த சாத்வீகப் போராட்டத்தில் பொலிஸ் ஜீப்பின் முன்பாக குறுக்கே படுத்துவிட்டார் நாகநாதன்.

ஆத்திரம் அடைந்த பொலிஸ் அதிகாரி குண்டாந்தடியால் நாகநாதனை அடித்தார். அடி கழுத்தின் பின்புறம் விழுந்தது.

நாகநாதன் அசையவில்லை. குண்டாந்தடிதான் உடைந்தது என்று அப்போது பேசப்பட்டது.

அந்த அடியில் பட்ட உட்காயமும் இரும்பு மனிதன் நாகநாதனின் விரைவான இழப்புக்கு காரணம் என்று அப்போது நம்பப்பட்டது.

அமரர் நாகநாதன் போன்றவர்களின் செந்நீரும், வியர்வையும்தான் தமிழ் தேசிய எழுச்சிக்கும் உணர்ச்சிக்கும் உரமாக அமைந்தன.

அருளம்பலம் பாராளுமன்ற உறுப்பினரானார். கட்சி மாறினார்.

1972ல் தமிழரசு கட்சியும்-தமிழ் காங்கிரசும் ஒற்றுமை கண்டன. தமிழர் கூட்டு முன்னணி (TUF) உருவாகியது. (இ.தொ.காவும் கூட்டணியில் ஒரு அங்கமாக இருந்த போதும் வடக்கு-கிழக்கு அரசியலுக்குள் தலைபோடவில்லை)

கூட்டணி மேடைகளில் அருளம்பலம் 'கள்ளன்', 'துரோகி' போன்ற வார்த்தைகளால் அர்ச்சிக்கப்பட்டார்.

### செத்த பாம்புக்கு சொல் அடி

நல்லூரை தலைநகரமாகக் கொண்டு ஆட்சி நடத்திய யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசி தமிழ் மன்னன் சங்கிலியன்.

அந்த சங்கிலியனை காட்டிக்கொடுத்தவனும் ஒரு தமிழன்.

அந்த எட்டப்பனின் மறு பிறவியாகவே அருளம்பலம் கூட்டணியினரால் சுட்டிக் காட்டப்பட்டார்.

அருளம்பலம் அரசியல் செல்வாக்குப் படைத்த ஒருவரல்ல.

அதுவும் கட்சிமாறியபின் அவர் ஒரு செத்த பாம்பு.

ஆனாலும் செத்த பாம்பையும் விடாமல் கூட்டணித் தலைவர்கள் சொல்லால் அடித்துக் கொண்டிருந்தனர்.

அரசியலில் தமக்கு எதிராக கடைவிரித்த எவரையுமே கூட்டணித் தலைவர்களால் சகித்துக்கொள்ள முடியாமல் இருந்தது.

தமிழரசுக் கட்சியும் தமிழ் காங்கிரசும் தனித் தனியே அரசியல் நடத்தியபோது அக் கட்சிகளைச் சார்ந்தோர் அரசில் அங்கம் வகித்தார்கள். அமைச்சர் பதவிகளும் பெற்றார்கள்.

தமிழ் காங்கிரஸ் தலைவர் ஜி.ஜி. பொன்னம்பலம் அமைச்சராக இருந்திருக்கிறார்.

தமிழரசுக் கட்சி பிரமுகராக இருந்த அமரர் திருச்செல்வமும் அமைச்சராக இருந்திருக்கிறார்.

வேறு கட்சிகளைச் சேர்ந்த தமிழர்கள் அரசோடு இருப்பதையோ, அமைச்சர்களாக இருந்ததையோ அந்த இரு கட்சிகளாலுமே சகிக்க முடியாமல் போய்விட்டது.

கூட்டணியாகியபின் இரு கட்சிகளும் ஒன்றாய் நின்று ஒரே குரலில் துரோகிப் பட்டியலை ஒப்புவித்தார்கள்.

தாம் அமைச்சர்களாக இருந்தது சாணக்கிய தந்திரம்.

பிறகு தமிழர்கள் அமைச்சர்களானால் அது காட்டிக்கொடுக்கும் காரியம்.

அதுதான் தமிழர்களுக்கு ஒரு குறிப்பிட்டகாலம் தலைவர்களாக இருந்தவர்களது அகராதி.

அரசோடு சேர்ந்த அருளம்பலமும் கூட்டணியின் துரோகிகள் பட்டியலில் இடம்பெற்று தீவிரவாத இளைஞர் குழுக்களது கொலைப் பட்டியலில் சேர்க்கப்பட்டவர்.

1976ல் குட்டிமணி குழுவினரால் அருளம்பலம் சுடப்பட்டார்.

சூடுபட்டவுடன் அருளம்பலம் சுருண்டு விழுந்துவிட்டார்.

செத்துவிட்டார் என்று நினைத்து குட்டிமணி குழுவினர் சென்றுவிட்டனர்.

ஆனால் அருளம்பலம் பிழைத்துக் கொண்டார்!

இந்தக் கொலை முயற்சியை கூட்டணியினர் கண்டித்ததாக நினைவில்லை.

### வலதுகரம் வீழ்ந்தது

அதே ஆண்டு குட்டிமணி குழுவினரால் குறிவைக்கப்பட்டு தப்பிக்கொண்ட இன்னொருவர் கு.விநோதன்.

இவர் உடுவில் தொகுதி சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளராக இருந்தவர்.

அருளம்பலத்தின் வலதுகரமாக இருந்தவர் தாடித் தங்கராஜா.

கூட்டணி சார்பான இளைஞர்கள் பலர் தொடர்பாக பொலிசாருக்கு தகவல் கொடுத்து வந்தார்.

1977ம் ஆண்டளவில் கொக்குவிலில் இருந்த அவரது வீட்டுக்குள் புகுந்த



தங்கத்துரை

குட்டிமணி குழுவினர் சரமாரியாக சுட்டுத் தீர்த்தனர்.

தாடித் தங்கராஜாவின் கதை முடிந்தது. அரசியல்வாதிகளுக்கு எதிரான கொலை நடவடிக்கைகளில் ஒன்றாக தாடித் தங்கராஜாவின் கொலையையும் சேர்த்துக்கொள்ளலாம்.

1978ம் ஆண்டில் குட்டிமணி குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட மற்றொரு நடவடிக்கை பொலிஸ் அதிகாரி குருசாமிக்கு குறிவைப்பு!

'சுடடா' என்றார் குட்டிமணி.

தயங்கி நின்றார் ஒபரோய் தேவன்! பிறகென்ன நடந்தது? அது அடுத்த வாரம்.

(தொடர்ந்து வரும்)

### துரையப்பா வழக்கில் அல்ல

இத் தொடரின் பல குறிப்புகளுக்கு ஆதார ஆவணங்கள் இருக்கின்றன. வேறு சில ஞாபக சக்தியை நம்பி எடுத்துத் தரப்படுபவை. சில சமயம் எழுதும் வேகத்தில் ஞாபக சக்தி தவறிழைத்துவிடலாம். உதாரணமாக அமரர் திருச்செல்வம் பற்றி கூறியபோது துரையப்பா வழக்கில் ஆஜராகி 'சிறிலங்கா சட்டங்கள் தமிழ் ஈழத்துக்கு பொருந்தாது' என அவர் வாதிட்டதாக குறிப்பிட்டிருந்தேன். தொடரை மீண்டும் திருப்பிப் பார்த்தபோது அது தவறு என்று மூளையில் உறைந்தது.

துரையப்பா கொலை வழக்கில் கூட்டணித் தலைவர்கள் அமிர், சிவசிதம்பரம், நவரத்னம் உட்பட முக்கியமான சட்டத் தரணிகள் ஆஜரானது உண்மைதான். ஆனால், திருச்செல்வம் சிறிலங்கா சட்டம் தமிழ் ஈழத்துக்கு பொருந்தாது என வாதிட்டது துரையப்பா கொலை வழக்கில் அல்ல.

தமிழ் ஈழம் கோரும் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்து, கைதான தமிழ் தலைவர்கள் மீதான வழக்கில்!

'ட்ரயல் அற்பார்' என்னும் விசேட நீதிமன்றத்தில் (ஜூரிகள் இல்லாத நீதிமன்றம்) அந்த வழக்கு நடந்தது. அமரர் ஜி.ஜி.பொன்னம்பலம் தமிழ் ஈழம் என்ற சொல்லையே உச்சரிக்காமல் சட்டவாதம் செய்தார். அமரர் திருச்செல்வம் 'தமிழ் ஈழம் இறைமையுள்ள நாடு' என்று எடுத்துக்காட்டி வாதம் செய்தார். தமிழ் ஈழக் கோரிக்கைக்கு மிகப் பெரும் பிரசார லாபமாக அமைந்த வழக்கு அது.

## எக்ஸ்ரே ரிப்போர்ட் தொடர்ச்சி

ஆனால், இப்போது நிலமை வேறாகி விட்டது.

இந்தியா தேவையில்லை. தரகர்கள் வேண்டாம் என்று புலிகள் கூறுகிறார்கள்.

இலங்கை அரசு விரும்பினாலும் இந்திய மத்தியஸ்தத்தை புலிகள் நினைத்துப்பார்க்கக்கூட தயாராக இல்லை.

புலிகளைப் பொறுத்தவரை தாம் ஒரு வேண்டாத விருந்தாளியாகிவிட்டதை இந்தியா அறியும்.

அதற்காக இந்தியா இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சனை எப்படிப் போனால் என்னவென்று முகத்தைத் திருப்பிக் கொண்டு விடும் என்று நினைக்கக்கூடாது.

இந்தியாவின் தேசிய நலனும் அதன் அயல்நாடுகளது உள்நாட்டுப் பிரச்சனைகளோடு சம்பந்தப்பட்டிருக்கிறது.

அதுவும், புலிகள் இந்தியாவின் அரசியல் தலைமைத்துவத்திற்கே அச்சுறுத்தல் விடுமளவுக்கு தமது கைகளை நீட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

இந்தியா முன்பு புலிகள் உட்பட சகல தமிழ் அமைப்புகளுக்களும் உதவி செய்ய ஒருபகுதி நிதியைச் செலவிட்டது.

இப்போது புலிகளிடம் இருந்துவரும் அச்சுறுத்தலைத் தடுக்க பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு ஒரு பகுதி நிதியைச் செலவிடுகிறது.

புலிகளை எதிர்த்துப் போராட தமிழ் நாடு காவல்துறைக்கு மத்திய அரசு தரும் நிதி போதாது என்று தமிழக முதல்வர் வேறு குறை கூறிக்கொண்டிருக்கிறார்.

எனவே- நேரடியாக தலையிடாவிட்டாலும் மிக உன்னிப்பாக அரசு-புலிகள் பேச்சுப் பற்றி இந்தியா அவதானித்துக் கொண்டிருக்கிறது.

மறுபுறம், புலிகளோடு பேசவேண்டாம் என்று நேரடியாகக் கூறுவதைவிட, பட்டறியட்டும் என்று பேசவிட்டு வேடிக்கை பார்க்கவும் இந்தியா நினைக்கலாம்.

பிரபாவால் சமரச தீர்வுக்கு வரமுடியாது. பிரபாவை திருப்திப்படுத்தும் தீர்வை இலங்கை அரசு கொடுக்கவும் முடியாது என்று இந்தியா நினைக்கலாம். அப்படி நம்புவதற்கு புலிகளுடனான தனது கடந்த கால உறவின் அனுபவங்களை இந்தியா நம்பியிருக்கக்கூடும்.

எனவே- தடுப்பதைவிட பேசிப்பார்த்து காயத்தோடு திரும்பும் இலங்கை அரசுக்கு அதன்பின்னர் இந்திய உதவியின் அவசியத்தை ஆழமாக உணர வாய்ப்பு ஏற்படும் என்று இந்தியா எதிர்பார்க்குமானால், பேச்சு முயற்சிகளை ஊக்குவிக்காவிட்டாலும் குறுக்கே நிற்காது.

மறுபுறம், பிரபாகரன் உள்ளவரை புலிகளோடு நல்லுறவு கொள்வது என்பது நடக்காத காரியம் என்று இந்தியா நினைக்கலாம்.

அதேநேரம் புலிகள் தீர்க்கமான சக்தியாக இருப்பதால் தீர்வு முயற்சிகளில் அவர்களை கவனத்தில் கொள்ளவேண்டிய அவசியத்தை புறக்கணிக்க முடியாதிருப்பதும் இந்தியாவுக்கு விரும்பத்தகாத நிலவரம்தான்.

பிரபா இல்லாவிட்டால் ராஜிவ் கொலை பழியை அவர்மீது போட்டுவிட்டு புதிய தலைமையோடு **"மறப்போம் மன்னிப்போம்"** பாணியில் பேசுவது இந்தியாவுக்கு சுலபம்.

ஆக, பிரபாவைக் கொல்ல இந்தியா சதி செய்கிறது என்ற தகவலில் உண்மை இருக்கிறதோ இல்லையோ, பிரபா உயிரோடு இருப்பது இந்தியாவுக்கு வெல்லமல்ல என்பது மட்டும் தெளிவு.

இதேசமயம் ஜனாதிபதி சந்திரிக்கா தனது முதலாவது வெளிநாட்டு விஜயமாக இந்திய விஜயத்தை அறிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் விஜயம் குறித்து யாழ்ப்பாணத்தில் புலிகளது பிரசார

### 'பேசாதே என்று இந்தியா தடுக்காது' ஆனால்........................

சாதனங்கள் சந்தேகங்கள் வெளியிட்டுள்ளன.

'யாழ் வந்து பேசப்போகிறேன்' என்றவர் இப்போது இந்தியாவுக்கு செல்லப் போகிறேன்' என்கிறார் என்று திரு.அன்ரன் பாலசிங்கம் ஜனாதிபதியின் இந்திய விஜயத்தைப் பற்றி பேசியிருக்கிறார்.

வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இந்தியாவுக்கு செல்லமுன் அளித்த பேட்டியொன்றில், "புலிகள் தனது விஜயத்தையிட்டு சந்தேகப்படவேண்டாம். இதில் எந்த உள்நோக்கமும் கிடையாது" என்று கூறியிருக்கிறார்.

யாழ் செல்லத்தான் புலிகளிடம் அரசு விசா பெற வேண்டும். இப்போது வெளிநாடு செல்வதானாலும் புலிகளுக்கு விளக்கம் சொல்லிவிட்டுப் போகவேண்டியிருக்கிறது.

ஆனால் எந்த விளக்கத்தையும் புலிகள் நம்பும் நிலையில் இல்லை. இரண்டாம் கட்டப் பேச்சுக்கு முன் வெளிநாட்டமைச்சர் இந்தியா செல்வது புலிகளுக்குப் பிடித்தமான விசயமல்ல என்பது மட்டும் உண்மை.

போர்த் தந்திரப்படி எதிரிக்கு எதிரிதான் நண்பன்.

அரசு இந்தியாவுடனும் நட்புக்கொண்டபடி புலிகளோடு நட்புக்கொள்ள நினைக்கிறது.

புலிகளுடன் பேசும் அதே நேரத்தில் இந்தியாவிற்கு விரோதமாக இங்கு ஒன்றும் நடக்கவில்லை என்று இந்தியாவிடம் தெளிவுபடுத்தவும் புதிய அரசு விரும்புவதாகத் தெரிகிறது.

இது முன்னாள் ஜனாதிபதி அமரர் பிரேமதாசாவின் அணுகுமுறையில் இருந்து மாறுபட்டது.

பிரேமா-புலிகள் உறவு எதிரிக்கு எதிரி நண்பன் என்ற அடிப்படையில் மலர்ந்த உறவாக இருந்தது.

இலங்கை விவகாரத்தில் இந்தியா சொல்வதையெல்லாம் ஜனாதிபதி சந்திரிக்கா கேட்பாரா என்ற கேள்விக்கு உறுதியான தொனியில் 'இல்லை' என்று பதில் சொல்ல முடியாது.

காமினி கொலைக்கு முன் இந்தியாவின் புலிகள் தொடர்பான நிலைப்பாட்டை சந்திரிக்கா ஓரளவுதான் காதுகொடுத்துக் கேட்டிருப்பார்.

ஆனால், இப்போது சந்தேக நிழல் உறுதியாக படிந்துவிட்டது. எப்போது எதைச் செய்வார்கள் என்று புலிகள் பற்றி ஒரு கணிப்புக்கு வருவது சுலபமல்ல என்று அரசுக்கு புரிந்தாகிவிட்டது.

எனவே- இந்தியாவின் உதவி தேவை என்ற கருத்தை மனதில் கொண்டே இந்தியா சொல்லும் விடயங்களுக்கு ஜனாதிபதி காது கொடுக்க வேண்டியிருக்கும்.

ஆனால், இந்தியா பேசவேண்டாம் என்று சொல்லப் போவதில்லை.

**'கவனம் நம்பாதீர்கள். ஆழத்தில் போய் சிக்கிக்கொள்ளாதவாறு காலை வையுங்கள்'** என்று மறைமுகமாக உணர்த்தக்கூடும்.

**யார் எது சொன்னாலும் ஒன்று மட்டும் உறுதியானது. இலங்கை இனப்பிரச்சனை விவகாரத்தில் இருந்து இந்தியாவை முற்றாக ஓரம்கட்ட ஒருநாளும் முடியாது.**

பிரேமா மறைவுக்குப் பின் ஐ.தே.கட்சி தலைமைகூட இந்தியாவோடு முரண்பட்ட கொள்கை ஒன்றை எடுக்கும் நிலையில் இல்லை.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சிக் காலத்தில் இந்திய உறவு இனிய பூவாக மலர்ந்திருந்தது. அவரது மகளின் காலத்திலும் மீண்டும் அந்தப் பூ பூக்கும்.

புலிகள் தவிர்ந்த ஏனைய தமிழ் அமைப்புக்கள் அனைத்துமே **'இந்தியா நண்பன்'** என்றுதான் சொல்லுகின்றன.

புலிகளைப் பொறுத்தவரை மட்டுமே இந்தியா வேண்டாத விருந்தாளி.

இனப்பிரச்சனை விவகாரத்தில் புலிகள் தீர்க்கமான சக்தியாக இருப்பதால் தனக்கு இலங்கையில் அதிகமான நண்பர்கள் இருப்பதை நினைத்து இந்தியா பூரணமாக திருப்திப்பட்டுக்கொள்ள முடியாத நிலையில் இருக்கிறது.

அரசு-புலிகள் பேச்சை அவதானமாகக் கவனித்துவிட்டுத்தான் இந்தியா தனது அடுத்த காயை நகர்த்தும் என்று தெரிகிறது.

இதற்கிடையே, 'தலையிடோம்' என்று இந்தியா சொல்வதும், இந்திய விஜயங்கள் பற்றிய அரச தரப்பு விளக்கங்களும் பல்வேறு கோணங்களில் வெளிவரக்கூடும். அவை யெல்லாம் முழு உண்மைகளைப் பேசும் செய்திகள் என்று நாம் நம்பினால் அரசியலில் விரல் சூப்பும் குழந்தைகள் நாம் என்றுதான் அர்த்தம். ■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்